## அபி வெனுவென் அபி நிதியம் - 2018

------------------------------------------------------------------------

### 1.1 அபிப்பிராயம்

அபி வெனுவென் அபி நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாகபோதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான

சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 <u>நிதிக்கூற்றுக்கள்</u>

### 1.5.1 <u>நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு</u>

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ‘‘முறையாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வது அவசியமாகவுள்ளது.

## 1.6 <u>பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்</u>

### 1.6.1 <u>பெறவேண்டிய தொகை</u>

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 07 தொடர்பாடல் கம்பனி களிலிருந்து கிடைக்க வேண்டிய தொலைத்தொடர்பு கோபுர வருமானம் ரூபா 22.92 மில்லியனாக இருந்த போதும் அந்த மீதிகளை குறித்த தொலைபேசிக் கம்பனி யிடமிருந்து உறுதிப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2019 சனவரி மாதம் ரூபா 997,734 தொகை அறவிடப்பட்டிருந்தது. | மேலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 24.92 மில்லியனை உன்படிக்கையின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரணஜயபுர வீடமைப்பு செயற்திட்டத்தின் 439 நலனாளிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட நிலுவை தவணைப் பணம் ரூபா 21.51 ஆக இருந்தது. 02 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவைக் கடன் தவணைகளின் பெறுமதி ரூபா 12.38 மில்லியனும் ஆகவும் 05 ஆண்டுகளை மிகைத்த நிலுவைத் தவணை ரூபா 1.93 மில்லியனும் அதில் உள்ளடங்கியிருந்தது. | இது தொடர்பாக உரிய பிருவகுளடன் தொடர்பு கொண்டு எதிர்காலத்தில் இந்நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உடன்படிக்கையின் பிரகாரம் நவடிக்கை எடுத்து நிலுவை பணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 <u>சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.</u>

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2008 இன் 06 ஆம் இலக்க அபி வெனுவென் அபி நிதிய சட்டம்<br>(i) 04 ஆம் பிரிவு | சட்டத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுவதற்கு உரிய அல்லது அண்மித்த நோக்கமொன்றாக அல்லாத தொழில்துறை பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றும் நலன்புரி சுற்றுலாவிற்காக ஓய்வுபெற்ற உததியோகத்தர்களின் சங்கத்திற்கு ரூபா 1,043,500 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சட்டத்தின் 5(1) இன் கீழ் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் முகாமைத்துவ சபை அங்கீகாரத்தின் பேரில் ரூபா 1,043,500 தொகை இந்நிதியத்திலிருந்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2008 இன் 06 ஆம் இலக்க அபி வெனுவென் அபி நிதிய சட்டத்தின் 04 ஆம் பிரிவின் நோக்கங்கள் மற்றும் இலக்குகள் நிறைவேற்றுவதற்குரிய அல்லது அண்மித்த நோக்கங்களுக்காக மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. |
| (ii) 6 ஆம் பிரிவு | நிதியத்தின் நிதிக் கூற்றுக்களுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை நிதியத்தின் ஆரம்பத்திலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறிதத் கணக்கு அறிக்கை அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அனைத்து கணக்கு அறிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | 2008 இன் 06 ஆம் இலக்க அபிவெனுவென் அபி நிதிய சட்டத்தின் 11(6) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 756 | நிதியத்திற்காக மீளாய்வாண்டில் பொருள் மெய்மையாய்வு மேற் கொள்ளப்பட்டு அக்கணிப்பீட்டு அறிக்கை 2019 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருகக்வில்லை. | பொருள் மெய்மையாய்வுச் சபை நியமனம் செய்யப்பட்டுள்ளது. பரிசோதனை முடிவடைந்து உடன் அறிக்கைகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் நி.பி 756 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.8 <u>நிதி முகாமைத்துவம்</u>

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்தின் எதிர்கால நிதி தேவைப்பாடு தொடர்பாக முறையான திட்டமொன்று தயாரிக்கப்படாமல் நிதியத்தினால் நிலையான வைப்பொன்றை முதிர்ச்சியடைவதற்கு 18 நாட்களுக்கு முன்னர் காசாக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் வங்கியால் முதலீட்டு வட்டியை கணிப்பிடுவதற்காக இனங்காணப்பட்ட வட்டி வீதமான 11 சதவீதத்திற்கு பதிலாக 8.25 சதவீதத்தால் வட்டி கணிப்பிடப்பட்டதன் காரணமாக ரூபா 439,247 ஆன வட்டி வருமானமொன்று நிதியத்திற்கு இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பகுதியளவு வீடமைப்பு செயற்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட நலனாளிகளின் அவசர நிதி தேவைப்பாட்டின் பேரில் நிலையான வைப்புக்கள் பணமாக்கப் பட்டிருந்ததுடன் நிதியத்திற்கு நிதி தேவைப்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் முகாமைத்துவம் செய்வதற்கும் நிதி உதவிகளை விடுவிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி தேவைப்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு நிதிக் கட்டுப்பாடு முறைமைப்படுத்தப்பட வேண்டும். |

## 2. <u>நிதி மீளாய்வு</u>

### 2.1 <u>நிதி விளைவுகள்</u>

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 101,988,572 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 196,813,687 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 298,802,259 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. நிதியத்தின் வருமானம் ரூபா 28,582,415 ஆல் அதிகரித்த போதும் செயற்திட்ட அபிவிருத்தி செலவினம் ரூபா 309,756,656 ஆலும் செயற்திட்ட செயற்பாட்டுச் செலவினம் ரூபா 6,835,752 ஆல் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் வரிசை அமைச்சின் கீழ் காணப்படும் கம்பனியொன்றிடமிருந்து ரூபா 10 மில்லியனும் மற்றும் தனியார் நன்கொடையாக ரூபா 362,390 தொகையும் நிதியத்திற்கு கிடைத்திருந்தது. எவ்வாறாயினும், 2008 இன் 06 ஆம் இலக்க அபிவெனுவென் அபி சட்டத்தின் 5(2)(1(அ) பிரிவின் பிரகாரம் நிதியத்தை பயன்படுத்துவதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலகங்களிலிருந்து நிதியங்களை சேகரித்தல், வெகுமதிகள் மற்றும் நன்கொடைகளை பொறுப்பேற்கும் இயலுமை காணப்பட்ட போதும், நிதியத்தை பலப்படுத்துவதற்காக வேறு எந்தவொரு நிகழ்ச்சித்திட்ட மொன்றும் செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் நடாத்தப்படும் முகாமைத்துவ சபைக்கு இந்த முன்மொழிவினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன் பிரகாரம் முகாமைத்துவ தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு நிதியத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2008 இன் 06 ஆம் இலக்க அபி வெனுவென் அபி சட்டத்தின் 5(2)(1(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16.2 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதியத்தினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சிற்குரிய செயலாற்றல் அறிக்கை சமர்பிக்கும் போது அபி வெனுவென் அபி நிதியத்திற்குரிய செயலாற்றல் அறிக்கையையும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16.2 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்காக நீண்டகால தொலைநோக்குடன் குறித்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக இலக்கிடப்பட்ட செயற்பாடுகள், நிதியத்தின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போது சேவையிலுள்ள பதவியணியினர், வருடாந்த செயற்பாடுகளுக்கான நிதிய தேவைப்பாட்டுத் திட்டம் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று நிதியத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முழுமையான மற்றும் பகுதியளவு வீடமைப்பின் கீழ் நலனாலிகளின் எண்ணிக்கை மாத்திரம் குறிப்பிடப்பட்ட திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.. | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்ட மொன்று நிதியத்தனால் தயாரிக்கப்பட வேண்டும். |

**4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க இலங்கை நிலைபேறான அபிவிருத்தி சட்டம் மற்றும் சனாதிபதி செயலாளரின் 2018 மார்ச் 16 ஆந் திகதிய பீஎஸ்/எஸ்பீ/எஸ்பீ/3/201 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியத்தினால் நிலைபேறான அபிவிருத்தி சட்டம் தொடர்பாக அறிந்து அந்நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு தேவையான இலக்குகளை இனங்கண்டு அந்த இலக்குகளை அளவிடுவதற்காக குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்க வில்லை | 2017 இன் 19 ஆம் இலக்க இலங்கை நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தில் குறிப்பிட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நிதியத்தின் அனைத்து பிரிவுகளும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | சனாதிபதி செயலாளரின் 2018 மார்ச் 16 ஆந் திகதிய பீஎஸ்/எஸ்பீ/ எஸ்பீ/3/201 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |